## செயற்குழுக் கூட்டம் (16-12-2023)

இன்று (16 டிசம்பர் 2023) நமது இயக்கத் துணைத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில், பொது செயலாளர, ,துணைத் தலைவர், நான்கு செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு நவம்பர் மாத வரவு செலவு கணக்கு நிதிச் செயலாளரால் வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. உறுப்பினர் அடையாள அட்டை பற்றி விவாதிக்கப்பட்டது. ஏதாவது மாற்றம் தேவையெனின், அவை வருகின்ற பொதுக்குழுக் கூட்டத்தில் விவாதிக்க முடிவெடுக்கப்பட்டது.

3. இயக்கத்தின் நீதிமன்ற வழக்குகளின் இம்மாதத்தின் தற்போதைய நிலையில் மாற்றம் ஏதுமில்லையென அறிவிக்கப்பட்டது

4. நமது இயக்கத்தின் ஆண்டு உறுப்பினராக கீழ்க்கண்ட மூன்று பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

- **திரு R மோகன்**
- **திரு R அந்தோனிசாமி**
- **திரு V அருமைநாதன்**

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைவரும் ஆண்டு உறுப்பினராகிறார்கள்**.**

5. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம் ஒப்பம்

வே அய்யப்பன்
**துணத் தலைவர்**

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**